17.05.2019

சி.சி. 3/12

அ.சா. 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் மீது 1ம் எதிரி ராமசாமி என்பவர் சி.சி. 260/05 என்ற ஒரு தனி நபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியாக ஞாபகபமில்லை. அந்த வழக்கில் 2ம் எதிரி சார்லஸ் ஜேக்கப் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டு பின்னர் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் பிடிகட்டளை சம்பந்தமாக மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற கிளையில் உத்தரவு பெற்று வந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யக்கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்து தற்போது நீதித்துறை நடுவர் எண். 1 மதுரையில் சி.சி. 38/07 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள 16 ஆவணங்களில் ம.சா,ஆ,3, 4 ஆவணங்கள் தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானது இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களை தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் 1வது எதிரி எழுதிக்கொடுத்த குத்தகை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை ஜோடிக்க வேண்டும் என்ற எணணத்தில் பழைய விபரங்களை சொல்லி இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1, 2 எதிரிகள் நடத்தி வரும் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்திற்கும் 2001ம் ஆண்டிலிருந்து எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி முறைப்படி சங்க விதிகளின் படி பொதுக்குழு கூட்டி தீர்மானத்தின் அடிப்படையில் ம.சா,ஆ. 3 , 4 ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார். என்றால் சரியல்ல. என் மீது பண மோசடி வழக்கு போட்டுள்ளதால் எதிரிகள் மீது பொய்யாக தகவலைக் கூறி பழிவாங்கும் நோக்கத்தில் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் என் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் தற்போது பிளாசம் டிரஸ்டினல் மேனேஜிங் டிரஸ்டியாக இருந்துவருகிறேன்.

தமிழ்நாடு சமூக சேவா சஙங்கத்தில் செயலாளராக இருந்துவருகிறேன். விருதுநகர் சிறுவர் நீதிக்குழுமத்தில் உறுப்பினராக இருந்துவருகிறேன். சிசி. 38.'.07 என்ற வழக்கில் ராமசாமி என்மீது தனிப்புகார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற கிளையிலும் மற்றும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குகளிலும் என்னுடைய இனிசியலை மாறி மாறி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ந்ா்ன சித்தூா் கிராமம:. கள்ளிக்குடி தாலுகா, மதுரையில் குடியிருந்து வருகிறேன். இந்ததனிப்புகாரை நான் தாக்கல் செய்வதற்கு முன்பு மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் குற்றவியல் தடுப்பு பிரிவிற்கு பதிவுத் தபால் மூலம் புகார் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் மீது விசாரணை எதுவும் நடைபெறவில்லை. எனவே தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகு இந்நீதிமன்றம் கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு விசாரணை செய்ய அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது என்றும் மேற்படி புகாரின் விசாரணைக்கு நான் ஆஜராகாமல் 1ம் எதிரி ஆஜராகி ஆவணங்கள் தாக்கல் செய்ததன் அடிப்படையில் அறிக்கை சமா்ப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. தமிழ்நாடு சேவா சங்கத்தின் உறுப்பினராக சேர்வதற்கு முன்பே பிளாசம் டிரஸ்டைநடத்தி வருகிறேன் என்றால்சரிதான். பிளாசம் டிரஸ்டில் 5 நபர்கள் நிர்வாக உறுப்பினராக உள்ளனர். 1ம் எதிரி ராமசாமி தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் 1968ம் ஆண்டிலிருந்து செயலாளராக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல 1969ம் ஆண்டிலிருந்து 1998ம் ஆண்டு வரை செயலாளராக இருந்துவந்தார். 01.07.1998ம் தேதி நான் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். 31.05.1998ம் ஆண்டு உறுப்பினராக சேர்ந்தேன். நான் 01.07.1998ம் தேதி செயலாளராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு வரை கள்ளிக்குடியில்தான் நிர்வாக அலுவலகம் செயல்பட்டு வந்தது என்றால் சரிதான். 1999ம் ஆண்டு நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் ஏற்பட்ட தீர்மானத்தின் படி மதுரைக்கு நிர்வாக அலுவலகம் மாற்றப்பட்டது. அந்த பொதுக்குழு கூட்டத்தில் கூடுதலாக அலுவலகம் அமைப்பது சம்பந்தமாக தீர்மானம் போடப்பட்டது. தமிழ்நாடுசமூக சேவா சங்க அலுவலக முகவரி 12-4.'.24. ரயிலார் நகர். மதுரை – 18 என்ற முகவரியில்இயங்கி வருகிறது. அந்த பொதுக்குழுவில் பொதுக்குழு

உறுப்பினர்கள் தலைவர், செயலாளர், பொருளாளர் அனைவரும் கலந்து கொண்டார்களா என்றால் தலைவர் மட்டும் கலந்து கொள்ளவில்லை துணைத்தலைவர் கலந்து கொண்டார். துணைத்தலைவர் தலைவராக அந்த கூட்டத்தை நடத்தினார். 1ம் எதிரி ராமசாமி அந்த கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. பொதுக்குழு கூட்டி தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் அலுவலகத்தை மாற்றியது சம்பந்தமாக மாவட்ட பதிவாளரிடம் ஒப்புதல் பெறப்பட்டதா என்றால் அதற்குரிய படிவத்தில் சரியாக அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள தனிப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி நான் முதலில் குடியிருந்த வீட்டின் முகவரியாகும். தமிழ்நாடு சமூக சேவா சங்கம் கள்ளிக்குடியிலும் மதுரையிலும் செயல்பட்டு வருவதாக சொல்லியுள்ள நிலையில் எதற்காக என் வீட்டின் முகவரியை குறிப்பிட்டு தனிப் புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தனியாக புகார் செய்ததால் என் வீட்டின் முகவரி குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் தனி நபராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா அல்லது தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் செயலாளர் என்ற நிலையீல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இரண்டு நிலையிலும் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளேன். தமிழ்நாடு சமூக சேவா சங்க அலுவலகத்தை மதுரையில் மாற்றியது சம்பந்தமாக பெறப்பட்ட ஒப்புதல் ஆவணத்தை வேண்டுமென்றே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 16 ஆவணங்களில் இல்லை. வேண்டுமென்றே மேற்படி ஆவணத்தை நான் மறைக்கவில்லை. ம.சா.ஆ. 6 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பாரத ஸ்டேட் வங்கி திருமங்கலம் கிளையின் கணக்கு 1998ம் ஆண்டிற்கு முன்னரே கணக்கு துவக்கப்பட்டது. அந்த கணக்கு வரவு செலவை நானும் 1ம் எதிரி ராமசாமியும் இயக்கி வந்தோம். அந்த கணக்கு எண் தான் ம.சா,ஆ,6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் உறுப்பினராக சேர்வதற்கு முன்பே சங்கத்திற்கு என்று மேற்படி கணக்கு துவங்கப்பட்டது. ம.சா.ஆ. 6ல் உள்ள மதுரை நிர்வாக அலுவலக முகவரி என்று சொல்லப்படும் முகவரி பற்றிய விபரம் எப்போது அனுப்பப்பட்டது என்றால் மாவடட பதிவாளரிடம் அலுவலக முகவரி சம்பந்தமான தீர்மானம் அடங்கிய அறிக்கை சமா்ப்பிக்கப்பட்டு ஒப்புதல்பெற்ற பின்னா் முகவரி மாற்றி அனுப்பப்பட்டது. சரியாக எப்போது அனுப்பப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. முகவரி மாற்றப்பட்ட கடிதம் சம்பந்தமாக அறிக்கையில் தலைவர்

கையெழுத்து செய்யவில்லை. செயலாளர் என்ற முறையில் நான் கையெழுத்து செய்தேன். தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் உப விதிப்படி தலைவருக்கு கூட்டம் நடத்துவதற்கு மட்டும் உரிமை உ்ளளது என்றும் அலுவலக நிர்வாக நடவடிக்கை சம்பந்தமாக செயலாளருக்கு மட்டுமே உரிமை இருந்ததால் முகவரி மாற்றப்பட்ட கடிதத்தில் நான் கையெழுத:து செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள 16 ஆவணங்களில் 1ம் எதிரி ராமசாமிக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் உப விதியிலும் தமிழ்நாடு பதிவு சங்க சட்ட விதிகளில் அவ்வாறு உள்ளது. தேவை ஏற்படின் அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தமிழ்நாடு பதிவு சங்க சட்ட விதிகளில் எந்த பிரிவில் அதிகாரம் பற்றி குறிப்பிட்டுள்ளது என்ற எனக்கு சரியாக நினைவில்லை. பொதுக்குழுவில் எடுக்கப்படும் தீர்மானத்தை வைத்துதான் சங்கமானது செயல்படவேண்டும் அதன்படி தான் சமூகசேுவா சங்கமானது அந்தந்த காலகட்டங்களில் மாற்றங்கள் நிர்வாகம் மற்றும் பொதுக்குழுவிலோ மாற்றம் ஏற்படும் மற்றும் சங்க செயல்பாடுகளில் மாற்றம் ஏற்படும் பொதுக்குழுவில் எற்படும் தீர்மானங்களின் அடிப்படையில் சங்கமானது செயல்பட்டு வருகிறது. செயலாளருக்கு தான் அதிகாரம் உள்ளத என்றும் தலைவருக்கு அதிகாரம் இல்லை என்று தீர்மானம் எப்போது இயற்றப்பட்டது என்றால் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலமான 1969ம் ஆண்டிலிருந்து அவ்வாறு அதிகாரம் உள்ளது. என்னை சங்கத்தில் உறுப்பினராகவும் செயலாளராகவும் நியமித்தது 1ம் எதிரி ராமசாமி என்றால் ராமசாமி மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களால் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். செயலாளருக்கு தான் அதிகாரம் உள்ளது என்ற ஆவணத்தை நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணம் இந்த வழக்கிற்கு தேவையில்லாததது நேரடியாக சம்பந்தமில்லாததால் அந்த ஆவணம் தாக்கல செய்யப்படவில்லை. ம.சா,ஆ.6ல் குறிப்பிட்டுள்ள வங்கிக்கணக்கு என்னால் மோசடியாக உருவாக்கப்பட்ட கணக்கு என்றால் சரியல்ல. அந்தவங்கிக் கணக்கு எப் சி ஆர் ஏ விடம் காண்பித்து பணம்பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. முகவரி மாற்றியது சம்பந்தமாக பொதுக்குழு உறுப்பினர்களிடமும் தலைவரிடமும் கையெழுத:து பெறவில்லை என்றும் ' நானே தன்னிச்சையாக செயல்பட்டு முகவரி மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா,ஆ,6 ஆவணத்தில் குறிபபிட்டுள்ள எப் சி ஆர் ஏ அங்கீகாரம் எப்போது பெறப்பட்டது என்றால்

1998ம்ஆண்டிற்கு முன்பே அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேற்படி எப்சி ஆர்ஏ அங்கீகாரம் யாரால் பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எப் சி ஆர் ஏ அங்கீகாரம் 1998ம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் எப் சி ஆர் ஏ சட்டம் 2010ம் ஆண்டு தான்நடைமுறைக்கு வந்தது என்றும் எவ்வாறு 1998ம் ஆண்டிற்கு முன்னர் எப் சி ஆர் ஏ விடம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றால் 2010ம் ஆண்டு எப் சி ஆர் ஏ ல் திருத்தம் வந்தது, நான் சங்கத்தில்பொறுப்பில் வருவதற்கு முன்பே சங்கத்தலிருந்து எப் சி ஆர் ஏ யின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நான் 1998ல் செயலாளராக வந்த பிறகு முதலில் வாங்கிய எப் சி ஆர்ஏ அங்கீகாரத்தை என்னிடம் கொடுத்தார்கள் நான் பார்த்தேன். அதன் பிறகு நான் அங்கீகாரத்தை எத்தனை முறை மறு பதிவிற்கு அனுப்பினேன் என்றால் அது நிரந்தரமானது. எப்சி ஆர் ஏ யில் 2010ம் ஆண்டு திருத்தம் வந்ததால் மறுபதிவிற்கு அனுப்பினேன். சங்கத்தின் தலைவர்,செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் அனுமதியின்றி நான் மனு செய்து மத்திய அரசை ஏமாற்றி எப் சி ஆர் ஏ விடம் அங்கீகாரம் பெற்றுள்ளேன் என்றால் சரிய்ல்ல. செயலாளர் என்ற முறையில் முறைப்படி அங்கீகாரம் பெற்றுள்ளேன். எப் சி ஆர் ஏ வங்கிக் கணக்கை செயலாளர் மற்றும் பொருளாளர் செயல்படுத்தலாம். வங்கிக் கணக்கை நானும் எனக்கு ஆதரவான பொருளாளர் பெயரில் இயக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. சங்கத்தில்நான் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு செயலாளர் மற்றும் பொருளாளர் மேற்படி வங்கிக் கணக்கு இயக்கப்பட்டு வருகிறது. எப் சி ஆர் ஏ அனுப்பிய பதிலில் செயலாளருக்கு என்று குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அவருக்கு தான் அனுப்பப்பட்டுள்ளது. சீப் பங்சனரி என்று குறிப்பிட்டிருப்பது தான் செயலாளரைக் குறிக்கும். சீப் பங்சனரி என்பதை தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் உபவிதி மற்றும் தமிழ்நாடு பதிவு சங்க சட்டத்தின் படி செயலாளர் தான் சீப் பங்சனரி என்று சொல்கிறேன். சட்ட விதிகள் குறிப்பிட்டு எனக்கு தெரியாது. எப்சி.ஆர் ஏ விற்கு மட்டும் சீப் பங்சனரி என்றும் வங்கி கணக்கில் செயலாளர் என்று தான் அனுப்பப்பட்டுள்ளது. மறு பதிவு விண்ணப்பம் ஆன்லைன் மூலம் எனக்குகிடைக்கப்பெற்றது. மறுபதிவு விண்ணபத்தில் தலைவராக ராமசாமி என்பவரை குறிப்பிடாமல் வேறு நபரை காண்பித்து இந்த அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதுநாள் வரை எப் சி ஆர் ஏ மூலமாக எவ்வளவு

பணம் சங்கத்திற்கு பெறப்பட்டுள்ளது என்றால் எதுவும் பெறப்படவிலலை. இந்த கணக்கு தவிர வேறு ஒரு கணக்கை காண்பித:து எப் சி ஆர்ஏ விடமிருந்து நிதி உதவி பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. எப்சி ஆர்ஏ மூலம் பணம்பெறப்படவில்லை என்பதை நான் எனது வங்கி வருடாந்திர தணிக்கையில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 1998ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எத்தனை முறை சங்கத்தின் உபவிதி திருத்தப்பட்டுள்ளது என்றால் 2 அல்லது 3 முறை இருக்கும் சரியாக நினைவில்லை. ஒரு சங்கத்தின் உப விதிகளை மாற்ற வேண்டும் என்றால்அரசாணை வெளியிட வேண்டும் என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளரிடம் சங்கத்தின் உப விதி மாற்றப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது சங்க விதியை மாற்றி மாவட்ட பதிவாளரிடம் மாற்றி அனுப்பப்படட போது அதை அவர் அங்கீகரித்தாரா அல்லது நிராகரித்தாரா என்றால் நாங்கள் அங்கீகாரம் பெற்றதாக எனக்கு தெரியவில்லை. சரியாக ஞாபகமில்லை. எப்சி ஆர்ஏ மறு பதிவிற்காக பொதுக்கு கூட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்றால் நிறைவேற்றப்பட்டது. பொதுக்குழு∴ நிர்வாகக்குழு கூட்டி தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. எப்சி. ஆர்ஏ விற்காக பொதுக்குழு ∴ நிர்வாகக்குழு கூடடி எடுக்கப்படட தீர்மானத்தை மாவடட பதிவாளரிடம் அனுப்பி ஒப்புதல் பெறப்பட்டதா என்றால் அது அவசியமில்லை. சங்கத்தின் உள் நிர்வாகம் சம்பந்தப்பட்டது. சங்கத்தின் உள் நிாவாக கூட்டத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். அந்த காலகட்டத்தில் ஜே எம் டெய்சி ராணி என்பவர் சங்கத்தின் செயலாளராக இருந்தார். ஜே எம். டெய்சி ராணி தான் தலைவராக செயல்பட்டு வருவதாக இருந்து வருவதாக நான் தாக்கல் செய்துள்ள 16 ஆவணங்களில் குறிப்பிட்டு காட்டியுள்ளேனா என்றால் 10 வது ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. படிவம் 7ல் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தற்போதைய தலைவர் ஜேஎம் டெய்சி ராணி. முன்னாள் தலைவர் ராமசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. படிவம் 7 ஐ மாவட்ட பதிவாளர் நிராகரித்து விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி கூட்டம் மாவட்ட பதிவாளர் தலைமையில் (பிரதிநிதி) தான் நடந்தது. படிவம் 7 ஐ மாவட்ட பதிவாளர் நிராகரிக்காத பட்சத்தில் படிவம் 7 அங்கீகரித்தார்களா என்றால் நிலுவையில் இருந்து வருகிறது. எப்சி ஆர் ஏ தவிர வேறு எந்த ஆவணத்திலும் சீப் பங்சனரி என்று குறிப்பிட்டு புகாரோ வேறு ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் தான் தாக்கல் செய்துள்ளேன். எப்சி ஆர் ஏ விற்கு அனுப்பிய படிவத்தை வேறு ஆவணம் எதுவும் இணைத்து அனுப்பப்பட்டதா என்றால் அது அவசியமில்லை குறிப்பிட்டால் மட்டும் போதும். படிவம் 7 மாவட்ட பதிவாளரிடம் அங்கீகாரம் பெறாத நிலையில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எப் சி ஆர் ஏ விற்கு சீப் பங்சனரி என்று குறிப்பிட்டு மறு பதிவிற்கு விண்ணப்பம் செய்யப்படடது என்றால் ஓ எஸ் 504.். 04 தீர்ப்பு நகல் மற்றும் ம.சா,ஆ,1, 2, 9, 10 ஆவணங்களின் படி விண்ணப்பம் செய்யப்பட்டது. ம.சா.ஆ, 16 ஆவணத்தில் 1998 முதல் இன்று வரை நான் தான் செயலாளர் என்று விளம்புகை செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பக்கம் 27ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் சங்கத்தின் உப விதிகளின் படி யாரும் நிரந்தர தலைவர்களோ செயலாளரோ கிடையாது என்றால் சரிதான். ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் ஒரு முறை பொதுக்குழு கூடி தலைவர் மற்றும் செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நான் 1998ம் ஆண்டு செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 2001 ஆண்டுடன் என்னுடைய பதவி நிறைவு பெறுகிறது என்றால்சரியல்ல. ஒவ்வொரு 3 ஆண்டுகளிலும் பொதுக்குழு கூட்டப்பட்டு அதன் மூலம் தலைவர் செயலாளர் தேர்ந்தேடுக்கப்பட்டு படிவம் 7 மூலம் மாவட்ட பதிவாளரிடம் அனுப்பி வைக்கப்படும். படிவம் 7 ஐப் பார்த்தால் தான் சொல்ல இயலும். ம.சா,ஆ.10 ஆவணத்தில் 01.02.2011 முதல் 31.01.2014 வரை 2014 முதல் 2016 வரை , 2016 முதல் 2019, 2019 முதல் 2022 வரை தொடர்ச்சியாக நான் செயலாளராக இருந்துவருகிறேன். 2001 முதல் 2011 வரை நான் செயலாளராக இருந்தது சம்பந்தமாக எப்போது தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்று குறிப்பிட்டுசொல்ல இயலுமா என்றால் மினிட் புத்தகத்தை பார்த்து சொல்ல இயலும். 2001 முதல் 2011 வரை நான் செயலளாராக இருந்து வருவதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. ம.சா.ஆ.1,2,5,6,7,9 ஆவணங்கள் காட்டப்பட்டுள்ளது. 2008ம் ஆண்டு மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஏற்பட்ட உத்தரவின்படி மறுபடியும் தலைவர் மற்றும் செயலாளர் ஏற்கனவே இருந்தவர்கள் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு மாவட்ட பதிவாளர் முன்னிலையில் நடைபெற்ற பொதுகுழுவில் இயற்றப்பட்ட தீர்மானத்தை ஏன் மாவட்ட பதிவாளர் அங்கீகரிக்கவில்லையென்றால் ராமசாமி சங்கத்தை கலைத்துவிட்டதாக அறிக்கை

சமா்ப்பித்ததால் அங்கீகரிக்கப்படமால் நிலுவையில் வைக்கப்பட்டது. அதுசம்பந்தமாக நான் மாண்புமிகு உயா்நீதிமன்றத்திலோ அல்லது உரிமையியல் நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு சரியான நினைவில்லை. 1ம் எதிரி ராமசாமியும் 4ம் எதிரி மகாலட்சுமி உறவினா்களா என்றால் சரியாக தெரியாது. 1ம் எதிரி மற்றும் 3ம் எதிரி தாத்தா-பேரன் உறவுமுறை. 1ம் எதிரி ராமசாமியும் 3ம் எதிரி ஜோதிசுப்பிரமணியனும் உறவினா்கள் இல்லையென்றும் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரி மற்றும் 3ம் எதிரி உறவினா்கள் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிரி ராமசாமி என்னிடம் சொன்னாா். ம.சா.ஆ.3,4 ஆவணங்களில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ராமசாமி அவருடைய மகன் மற்றும் பேரனை சங்கத்தில் வைத்து நேரிடையாக அறிமுகம் செய்து வைத்தாா். தேதி எனக்கு சரியாக நினைவில் இல்லை. 07.03.2006ல் நான் பொதுக்குழு கூட்டி தீா்மானம் நிறைவேற்றியது சம்பந்தமாக படிவம் 7 மாவட்ட பதிவாளரிடம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்தபடிவம் 7ஐ மாவட்ட பதிவாளா் நிராகரித்து ந.க. எண். 2196/E1/2006 நாள். 03.07.2006 எனக்கு கடிதம் அனுப்பியுள்ளாா் என்றால் எனக்கு கடிதம் வரவில்லை. மேலும் என்னை விசாரணைக்கு வருமாறு எந்த அழைப்பாணையும் வரவில்லை. மேற்படி கடிதம் எனக்கு சாா்பு செய்யப்படவில்லை. இந்த ஆவணத்தை எதிா்த்து மதுரை உயா் நீதிமன்ற கிளையில் ரிட் மனு W.P. (MD) NO. 6541/2006 எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சாட்சி ரிட் மனு எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டது என்று சரியாக தெரியாது என்று தான் சொல்ல முடியும் என்று சொன்னாா். ரிட் மனுவை உயா் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது என்றால் சரிதான். ரிட்மனுவை தள்ளுபடி செய்தபிறகு உயா் நீதிமன்ற உத்தரவுப்படி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்தது சம்பந்தமாக எனக்கு ஞாபகமில்லை. உயா் நீதிமன்ற உத்தரவை மறைத்து 2016ம் ஆண்டு எப் சி ஆா் ஏ மறு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 22.08.1999ல் பொதுக்குழு கூட்டி என்னையும் என்னைச் சாா்ந்தவா்களையும் ராமசாமி தலைமையில் நடந்தகூட்டத்தில் நீக்கியதாக திா்மானம் போடப்பட்டுள்ளது என்றால் கூட்டம் பற்றி எனக்கு தெரியாது. தீா்மானம் பற்றி எனக்கு தெரியாது. 12.09.1999அன்று என் தலைமையில் கூட்டம் கூட்டி ராமசாமியையும் அவரைச் சாா்ந்தவா்களையும் நீக்கி தீா்மானம் போடப்பட்டது என்றால்

சரிதான். நான் பொதுக்குழு கூட்டி ராமசாமியை நீக்கியதை எதிர்த்து ராமசாமி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி தீர்மானத்தின் மீது மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவை ஆட:சேபித்து உரிமையியல் வழகசு தாக்கல் செய்யப்பட்டது. அந்த உரிமையியல் வழக்கில் மாவட்ட பதிவாளரின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது என்று நினைக்கிறேன் என்று சாட்சி சாட்சியமளித்தார். இந்த வழக்கு தாக்கல் செய்த போது எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாமல் கற்பனையாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தமிழ்நாடு சமூக சேவா சங்கமும் சித்தர் கூடமும் செய்துள்ள குத்தகைஒப்பந்தங்களை நான் பார்வையிட்டுள்ளேனா என்றால் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணங்களின் நகல் பெற்று பார்த்துள்ளேன். நான் 05.02.2019ம் தேதி எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் ஒரு மாதத்திற்க பிறகு ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா. 3, 4 ஆவணங்கள் நான் இந்த வழக்கில் சாட்சியமளித்த பின்னர் நகல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு முறை மேற்படி ஆவணத்தின் நகல் பெறப்பட்டுள்ளது. ம.சா,ஆ, 3 , 4 குத்தகை பத்திரத்தில் தமிழ்நாடு சேவா சங்கம் சிறப்பு பொதுக்குழு கூட்டி, கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குத்தகை பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்மானம் உண்மை அல்ல. குத்தகைக்கு விடப்பட்டசொத்து ரூ.1 கோடி என்று எவ்வாறு கணக்கிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ராமசாமி என்னிடம் மார்க்கெட் மதிப்பு ரூ 1 கோடி என்று சொன்னார். குத்தகைக்கு விடப்பட்ட காலத்தில் ஆஸ்பெட்டாஸ் ஆல் ஆன கட்டிடம் உடைந்த நிலையில் காணப்பட்டது என்றால் சரியல்ல. சங்கத்தின் உப விதிப்படி சங்க சொத்துக்களை தனி நபருக்கு வாடகைக்கோ குத்தகைக்கோ விடக்கூடாது ஆனால் அறக்கட்டளை அலலது வேறு சங்கத்திற்கு வாடகைக்கோ குத்தகைக்கோ விடலாம் என்று விதி உள்ளது என்றால் சரியல்ல. வேறு ஒரு சங்கத்திற்கு மட்டும் தான் அவ்வாறு விட இயலும். அறக்கட்டளைக்கு விட இயலாது. வேறு ஒரு சங்கத்திற்கு கொடுப்பதற்கு மாவட்ட பதிவாளரிடம் அனுமதி பெற்று தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கொடுக்கலாம். தமிழ்நாடு சமூக சேவா சங்கம் சித்தர்கூடத்திற்கு குத்தகைக்கு கொடுத்தது தவறா அல்லது குறைந்த தொகைக்கு

குத்தகைக்கு கொடுத்தது தவறா என்றால் செயலாளரான என் அனுமதி பெறாமலும் கொடுத்தது தவறு. அவ்வாறு குத்தகைக்கு கொடுக்க உரிமையில்லை. 2010 மற்றும் 2011ம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குத்தகைக்கு விடப்பட்ட ஆவணங்கள் சம்பந்தமாக அதனை ரத்து செய்வது சம்பந்தமாக வழக்கு எதுவும் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏனென்றால் சங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் நாங்கள் மாவட்ட பதிவாளரிடம் தான் முறையிட வேண்டும். குத்தகைக்கு விடப்பட்டஆவணங்கள் தற்போதுவரைஊர்ஜிதத்தில் இருந் துவருகிறது என்றும் 1 முதல் 4 எதிரிகளை தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சித்தர் கூடம் அந்த இடத்தில் என்ன நடத்தி வருகிறார்கள் என்று எனக்குதெரியாது. சித்தர் கூடம் ஏழைக் குழந்தைகளுக்கு 1 முதல் 5 வரை பள்ளி மற்றும் விடுதி இலவசமாக நடத்தி வருகிறார்கள் என்றும் மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சித்தர் கூடம் 6 முதல் 12ம் வகுப் வரையிலான மாணவர்களுக்கு இலவசமாக தங்கும் விடுதி கொடுத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மதுரை மாவட்ட ஆட்சியர் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவி கிடைக்கும் போது சித்தர் கூடத்தில் மேற்படி குழந்தைகளை சேர்த்து இலவச விடுதி அளிக்கப்பட்டு வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சித்தர் கூடம் இலவசமாக ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி மற்றும் சேவை செய்து வரும் நிலையில் அதனை பறித்து எப் சி ஆர் ஏ மூலம் நிதிஉதவி பெற்று அதை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராமசாமி 25.05.2003 அன்று சிறப்பு பொதுக்குழு கூட்டம் கூட்டி சங்கவிதிகளை திருத்தி மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி மாநில அரசால் G.O. Rt. No. 1079/07.10.2009 ம்தேதி அரசாணை வெளியிடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அரசாணை பற்றி தெரியாத பட்சத்தில் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற கிளையில் W.P. No. 2034/10 ல் எவ்வாறு ரிட் மனுதாக்கல் செய்யப்ட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்து மாதிரி உள்ளது சரியாக ஞாபகமில்லை. மேற்படி ரிட் மனு 12.03.2019ம் தேதி விசாரணைக்கு

பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இரண்டு முறை நான் மாண்பு மிகு உயர் நீதிமன்றத்தில் தமிழ் நாடு சமூக சேவா சங்கத்தின் செயலாளர் என்பதை நிரூபிப்பதற்காக வழக்கு தாக்கல் சயெ்தும் மேற்படி இரண்டு ரிட் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட விபரத்தைதெரிந்து கொண்டு வேண்டுமென்றே இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. இந்த ரிட் மனுக்களை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாததால் மேல் முறையீடு செய்யவில்லை. தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் நான் 2001லிருந்து செயலாளர் கிடையாது என்றும் என்னிடம் கேட்டு குத்தகைககு கொடுப்பதற்கு ராமசாமி மற்றும்2 வது எதிரிக்கு அவசியமில்லை என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளரிடம் இது குறித்து ஆட்சேபணை நிலுவையில் உள்ளது. அந்த ஆட்சேபணை மாவட்ட பதிவாளருக்கு எப்போது யாரால் அளிக்கப்பட்டது என்றால் நான் ஆட்சேபணை தெரிவித்துள்ளேன். மாவட்ட பதிவாளரிடம் ஆட்சேபணை தெரிவித்தது சம்பந்தமாக இந்த வழக்கு புகாரில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரை படிக்காததால் அது பற்றி எனக்கு சரியாக நினைவில்லை. குத்தகைக்கு விடப்பட்டது சம்பந்தமாக எந்தவிதமோசடியும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக மோசடியாக ஜோடிக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல.